இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
சட்டமாணிப் பட்டப்படிப்புத் திட்டம்
மட்டம் 03 – 2008/2009
**LWU 1412** -சட்ட முறைமை
தொடர் மதிப்பீட்டுப் பரீட்சை - 2
காலம்: 40 நிமிடங்கள்

திகதி: 26.11.2008 நேரம்: மு.ப 11.00 – மு.ப 11.40

**ஒரு வினாவிற்கு மாத்திரம் விடை தருக.**
**தெளிவற்ற கையெழுத்துக்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.**

1. "முன்னைய நியதிச்சட்டங்களினால் விசேடமாக ஆளப்பட்ட விடயங்களுக்கு இயைபான முறையில் விஸ்தரிக்காது, பின்னையதான நியதிச்சட்டத்தினது சொற்களானவை பிரயோக ரீதியில் நியாயமானதாகவும் அறிவார்த்தமானதாகவும் இருப்பதற்கு தகுதியுடையதாய் இருக்கும் போது வெறுமனைய அத்தகைய பொதுச் சொற்களின் பிரயோகத்தினால் முன்னைய மற்றும் விசேடமான சட்டங்கள் நேரடியாக இல்லாது ஒழிக்கப்பட்டதாகவோ அல்லது குறைத்து மதிப்பிடக்கூடியதாகவோ கருதப்படமுடியாது என்பது நிச்சயம்…" Per Lord Selborne L C, The Vera Cruze(1884) 10 AC 59

   இலங்கையில் வழங்கப்பட்ட தீர்ப்புக்களினை விசேடமாக முக்கியத்துவப் படுத்துவதனூடு மேல் விபரிக்கப்பட்டுள்ள மூதுரை நீதிமன்றங்களினால் பிரயோகிக்கப்பட்டு வந்த முறையை நுணுக்கமாக ஆராய்க.

2. கட்டுப்படுத்தும் முற்தீர்ப்புக்கள் கோட்பாட்டினைப்பற்றி பரீட்சயம் இல்லாத முதலாம் வருட சட்ட மாணவனாகிய பிரிய A,B,C மற்றும் D ஆகிய நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டதும் மற்றும் 2006ஆம் ஆண்டு மேன் முறையீட்டு நீதிமன்றத்தினால் தீர்க்கப்பட்டதுமான பெரேரா எதிர் பெரேரா எனும் வழக்கினை படிக்கின்றான். தற்போதைய உயர் நீதிமன்றம் ஏனைய நீதியமன்றங்களின் முன்னைய தீர்ப்புகளினால் பிணிக்கப்படாது எனவும் ஆனால் கீழ் நீதிமன்றங்கள் முற்தீர்ப்பினால் பிணிக்கப்பட்டவை எனவும் அவருக்கு கூறப்பட்டு இருந்தது. எவ்வாறாயினும் பெரேரா எதிர் பெரேரா வழக்கினைப் பொருத்தவரை P,Q,R மற்றும் E ஆகிய நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்ட வழக்குகளை விசாரிக்கும் இன்றைய உயர் நீதிமன்றமோ அல்லது A,B,C மற்றும் D ஆகிய நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்ட வழக்கினை தீர்க்கின்ற இன்றைய மாவட்ட நீதிமன்றமோ பெரேரா எதிர் பெரேரா இனை மேலோங்க முடியாது என அவனுக்கு கூறப்பட்டது. மேலும் பெரேரா எதிர் பெரேரா வழக்கினை பின்பற்றாது A,B,E மற்றும் F ஆகிய நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு தற்போதைய மாவட்ட நீதிமன்றம் தீர்த்த இன்னுமொரு வழக்கினை அவன் வாசித்தான்.

   1980ஆம் ஆண்டு உயர் நீதிமன்றத்தில் A,B,C மற்றும் D எனும் நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு தீர்க்கப்பட்ட வழக்கினை, பெரேரா எதிர் பெரேரா வழக்கினை தீர்க்கும் பொழுது மேன்முறையீட்டு நீதிமன்றம் கருத்தில் கொள்ளத் தவறிவிட்டது எனவும் அவ் வழக்கிற்கு முரணான தீர்ப்பினை நீதிமன்றம் வழங்கிவிட்டது எனவும் பிரிய தற்போது கண்டு பிடித்தான். பெரேரா எதிர் பெரேரா வழக்கின் வலிதுடைமையை எவ்வாறு இது பாதிக்கும் என்பதனைப்பற்றி அவன் நிச்சயம்மற்றவனாக இருக்கின்றான்.

   மேற்கண்ட சந்தர்ப்பங்களில் நீதிமன்ற முற்தீர்ப்பு என்ற கோட்பாடு எவ்வாறு தொழிற்பட்டுள்ளது என்பதனை பற்றி பிரிய குழப்பம் அடைந்துள்ளான் என்பதுடன் உமது உதவியினை நாடுகின்றான். உமது விடையினை பொருத்தமான உதாரணங்கள் மூலம் விளக்குவதனூடு மேற்கண்ட சந்தர்ப்பங்களை பிரியவிற்கு தெளிவுபடுத்துக.

(பதிப்புரிமையுடையது)